Registered as a Newspaper


# உதயன்

சுடர் : 41
கதிர் : 15

வியாழக்கிழமை
11 டிசெம்பர் 2025

கார்த்திகை 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## யாழ்ப்பாணம் வருவதற்கு கோத்தாவுக்கு அச்சுறுத்தலா?

சத்தியக் கடதாசி வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு!

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 11**

**காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பான வழக்கில், யாழ்ப்பாணத்துக்கு வந்து சாட்சியம் வழங்குவதில் எத்தகைய பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது என சத்தியக் கடதாசியைத் தாக்கல் செய்யுமாறு, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபயவுக்கு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார்.** »11

## யாழ். தேர்தல் பரப்புரைக்காக கோத்தாபய வந்தது எவ்வாறு?

சட்டத்தரணிகள் கடும் ஆட்சேபனை

யாழ்ப்பாணம், டிசெ. 11
ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக் காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த கோத்தாபய ராஜபக்சவுக்கு, நீதிமன்றத்துக்கு வருவதற்கு மட்டும் பாதுகாப்பு அச்சுறுத்தல் என்பதை ஏற்க முடியாது »11

யாழ்ப்பாணத்தில்

## வெள்ள நிவாரண உலருணவு; பெயர்ப் பட்டியல் பார்வைக்கு!

யாழ்ப்பாணம், டிசெ. 11
யாழ். மாவட்டத்தில் வெள்ள நிவாரண உலருணவுக் கொடுப்பனவுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட நபர்களின் பெயர் விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தலா »11

## வீடு தூய்மையாக்க 25,000 பெயர்ப்பட்டியல் எங்கே?

உலருணவுப் பெயர்ப்பட்டிலைக் காட்டி திசைதிருப்புவதற்கு முயற்சியா?

யாழ்ப்பாணம், டிசெ. 11
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட வீடுகளைத் தூய்மைப்படுத்துவதற்காக வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா மோசடியான முறையில் »11

அதிகூடிய மழைவீழ்ச்சி

## இலங்கையில் முல்லை. யாழில் தெல்லிப்பழை!

யாழ்ப்பாணம், டிசெ. 11
நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிதொடக்கம் நேற்றுக் காலை 8.30 மணிவரையான 24 மணி நேரத்தில் இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும், யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழையிலும் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.
இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் »11

## ஜனவரி 12 முதல் மீளவும் உ/த பரீட்சை

கொழும்பு, டிசெ. 11
ஜனவரி மாதம் 12ஆம் திகதிமுதல் உயர்தரப் பரீட்சைகள் மீள ஆரம்பிக்கும் என்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.
நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக, உயர்தரப் பரீட்சைகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. எஞ்சிய »12

## கிரேக்க பிணைமுறி வழக்கு 4 பிரதிவாதிகளும் விடுவிப்பு

கொழும்பு, டிசெ. 11
கிரேக்க பிணைமுறி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் உள்ளிட்ட நான்கு பிரதிவாதிகளும் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். 2012ஆம் ஆண்டில் கிரேக்கத்தில் கடும் பொருளாதார நெருக்கடி »11

## மணல் அகழ்வை எதிர்த்துப் போராடியவர் மணலுடன் பயணித்த டிப்பர் மோதிப் பலி



### மனைவியின் கண்முன் துயரம்

கிளிநொச்சி, டிசெ. 11
கிளிநொச்சியில் திருவையாறு பகுதியில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராகச் செயற்பட்டுவந்த நபர், நேற்று மணலுடன் பயணித்த டிப்பர் மோதி உயிரிழந்துள்ளார்.
கிளிநொச்சி - திருவையாறு, செல்வரத்தினம் சோபனாத் (வயது-35) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். »11




## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு எப்போதுதான் நீதி கிடைக்கும்?

வவுனியாவில் நேற்றுப் போராட்டம்!

வவுனியா, டிசெ. 11
சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வவுனியாவில் நேற்றுப் போராட்டம் முன் »11



நெடுந்தீவில் படகிலேற முயன்றபோது

## கயிறு தடக்கி கடலில் வீழ்ந்த குடும்பத்தலைவர் துயரச்சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 11
நெடுந்தாரகைப் பயணிகள் படகில் ஏற முயன்றபோது படகு கட்டும் கயிறு தடுக்கிக் கடலுக்குள் விழுந்த குடும்பத்தலைவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நெடுந்தீவு கிழக்கு 15ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் பிறேம்குமார் (வயது - 53) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு »11

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| திகதி | 10.12.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 4281 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 09 22 29 71 |
| விசேட எழுத்து | Y |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| திகதி | 10.12.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1348 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 13 24 49 57 |

**NLB ஜய**

| திகதி | 10.12.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 0307 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 5 0 4 9 |

**மெகா பவர்**

| திகதி | 10.12.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 2387 |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 04 |
| வெற்றி இலக்கங்கள் | 24 28 38 49 |

**மஹஜன சம்பத**

| திகதி | 10.12.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 6039 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 4 5 1 6 6 1 |

**தன நிதானய**

| திகதி | 10.12.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 2069 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 36 40 45 75 |
| விசேட எழுத்து | E |

**சுப தவசக்**

| திகதி | 10.12.2025 |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 0155 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 21 31 39 |

# நிவாரணப் பணிகளில் அரசியல் தலையீடுகள்

## கிராம அலுவலர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.11

**அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணம் வழங்கும் செயற்பாட்டில் அரசியல் தலையீடுகளினால் சுயாதீனமாகச் செயற்பட முடியாத நிலை உருவாகியுள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

இதுதொடர்பில் இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணப் பொருள்களை வழங்குதல் மற்றும் பாதுகாப்பு முகாம்களை நடத்திவரும் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக கிராம உத்தியோகத்தர்கள்மீது அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

கடந்த அரசாங்கங்களுடன் ஒப்பிடும்போது தற்போதைய அரசாங்கம் நிவாரணம் வழங்குதல், நிவாரண வழங்கும் செயற்பாடுகளையும் துரிதப்படுத்தியுள்ளது. எனினும் உரிய தரப்பினரிடம் நிவாரணங்களைக் கொண்டு சேர்க்கும் செயற்பாட்டில் கடந்த காலங்களைவிட இம்முறை அரசியல் தலையீடுகளால் கிராம உத்தியோகத்தர்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

இந்த நாடு பேரழிவைச் சந்தித்துள்ள இந்த நேரத்தில் தொழிற்சங்க நடவடிக்கைமீது கவனம் செலுத்த நாம் தயாராக இல்லை. எனினும் நிவாரணம் வழங்குவதில் தொடர்ந்து கிராம உத்தியோகத்தர்களுக்கு அழுத்தம் கொடுப்பார்களாயின், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய நிலை உருவாகலாம்-என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 10.12.2025 | புதன்கிழமை | 0747 | C | 0 1 8 9 0 3 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 10.12.2025 | புதன்கிழமை | 3013 | C | 35 38 42 55 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 10.12.2025 | புதன்கிழமை | C | 13 19 47 73 | 5174 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 10.12.2025 | புதன்கிழமை | 0843 | 20 27 41 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 10.12.2025 | புதன்கிழமை | தனு | 03 25 51 61 | 4725 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 10.12.2025 | புதன்கிழமை | Y | 18 | 02 56 69 70 | 2189 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 10.12.2025 | புதன்கிழமை | A | 34 57 64 69 | 2839 |

# நிவாரணப்பணிகளில் அழுத்தங்கள் இல்லை

## அரசாங்கம் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.11

பேரிடர் நிவாரணப்பணிகளில் அரசாங்க அதிகாரிகளுக்கு அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை அரசாங்கம் அடியோடு நிராகரித்துள்ளது.

அரசாங்க அதிகாரிகளுக்கு அரசாங்க தரப்பில் இருந்து எவ்வித இடையூறும் விளைவிக்கப்படவதில்லை. அரசாங்க ஊழியர்களுக்கு சுதந்திரமும், அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. அவர்களும் சிறப்பாக செயற்படுகின்றனர் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு சர்வதேச தொடர்பு இல்லை என விமர்சனம் முன்வைக்கப்பட்டது. ஆனால் சிறப்பான முறையில் உறவு பேணப்பட்டுவருகின்றது. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற நிதி முறையாக பயன்படுத்தப்படாததால் சர்வதேசம் நம்பிக்கை இழந்து இருந்தது. ஆனால் எமது நிர்வாகப் பொறிமுறைமீது சர்வதேசத்துக்கு முழு நம்பிக்கை உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

# டித்வா பேரிடர் ரஷ்யா உதவி

கொழும்பு, டிசெ.10

நாட்டைப் பாதித்த சீரற்ற கால நிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட இலங்கைப் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் ரஷ்யாவின் விமானம் இலங்கையை வந்தடைந்துள்ளது.

35 தொன் அளவுடைய மனிதாபிமான உதவிப்பொருள்களுடன் இந்த விமானம் வந்தது. (ச-இ)



# வெளிநாட்டு நிவாரணங்களை ஒருங்கிணைக்க உயர்மட்டக்குழு

கொழும்பு, டிசெ.11

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தைத் தொடர்ந்து இலங்கைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு மனிதாபிமான நிவாரண உதவிகளின் ஒருங்கிணைப்பு, ஒதுக்கீடு மற்றும் விநியோகத்தை உறுதிசெய்வதற்காக உயர்மட்டத் தேசியக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகள், ஐ.நா. நிறுவனங்கள், சர்வதேச அரசசார் நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் பரோபகாரர்களிடமிருந்து பெறப்படும் பொருள்கள் முறையாகவும் சரியான நேரத்திலும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன் வழங்கப்படுவதை உறுதிசெய்வதே இதன் நோக்கமாகும்.

நிவாரணம், மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளின் காலகட்டம் முழுவதிலும் இக்குழு செயலில் இருக்கும்.

மேலும் அந்நடவடிக்கைகள் முறையாக முடிவடையும் வரை அனைத்து வெளிநாட்டு உதவி தொடர்பான அமைப்புகளையும் தொடர்ந்து இக்குழு மேற்பார்வை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தரம் 6க்கான விண்ணப்பங்கள் கால எல்லை நீடிப்பு

கொழும்பு,டிசெ.11

பாடசாலைகளில் 6 ஆம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை அதிபர்கள் இணையவழி முறைமை ஊடாக சமர்ப்பிப்பதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

நிலவும் அனர்த்த நிலைமையைக் கருத்திற்கொண்டு அந்தத் திகதி நாளை 12 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ச-இ)

# பேரிடர் விவகாரங்களை ஆராய தெரிவுக் குழுவை அமையுங்கள்

## நாமல் ராஜபக்ச வலியுறுத்து

கொழும்பு, டிசெ.11

நாட்டில் ஏற்பட்ட பேரிடர் தொடர்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படாதது ஏன், இந்த விடயத்தில் எங்கு தவறு நடந்துள்ளது என்பது பற்றி ஆராய்வதற்குரிய நாடாளுமன்றத் தெரிவுக்குழு விரைவில் நிறுவப்படவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இதுதொடர்பில் ஓரிரு நாள்களுக்குள் சபாநாயகரிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்படும். அனர்த்தம் தொடர்பில் முன்கூட்டியே தெரிந்தும் அது பற்றி அலட்சியமாக இருந்துள்ளனரா? இந்த விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படவில்லை என்ற கருத்து நாட்டு மக்கள் மத்தியில் உள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்து உண்மை கண்டறியப்படவேண்டும் என வலியுறுத்துகின்றோம். நாடாளுமன்றம் விரைவில் கூட்டப்படவேண்டும். அப்போது இது பற்றிய மேலதிக தகவல்களை வெளியிடுவேன்-என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூகுள் வரைபடத்தில்

# இலங்கையின் பிரதான வீதிகளுக்கு 'நிகழ்நேரத் தகவல் எச்சரிக்கை' வசதி

**கொழும்பு,டிசெ.11**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து Google Map 'ஏ' மற்றும் 'B' வீதி வரைபடங்களைப் புதுப்பித்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அமைச்சர் தனது 'எக்ஸ்' கணக்கில் இட்டுள்ள பதிவில், இலங்கையின் பிரதான வீதி வலையமைப்புக்கு தற்போது கூகுள் வரைபடத்தில் நிகழ்நேர நிலை குறித்த எச்சரிக்கைகள் (realtime condition alerts) கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்தப் புதிய மேம்படுத்தல் இலங்கையின் 12,000 கிலோமீற்றர் நீளமுள்ள பிரதான வீதிகளை உள்ளடக்கியுள்ளது.

இது வீதி மூடல்கள் மற்றும் கட்டுமானப்பணிகள் உட்பட ஆறு வகையான எச்சரிக்கைத் தகவல்களை வழங்குகிறது. பயணத்திட்டங்களை மிகவும் திறமையாகத் திட்டமிடவும், எதிர்பாராத தாமதங்களைத் தவிர்க்கவும், வீதிப் பாதுகாப்பை மேம்படுத்தவும் இந்த முன்னோடித் திட்டம் உதவும். புறப்படுவதற்கு முன் பயணிகள் கூகுள் வரைபடச் செயலியில் உள்ள புதுப்பித்த தகவல்களைச் சரிபார்த்துக்கொள்ளலாம். அண்மையில்ஏற்பட்ட சூறாவளியைத் தொடர்ந்து இலங்கையின் வீதி வலையமைப்பில் ஏற்பட்ட பலத்த சேதங்களுக்குப் பின்னர் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## பொன்சேகாவின் நூல் கொழும்பில் வெளியீடு

கொழும்பு, டிசெ.11
இலங்கையில் இறுதிக்கட்டப் போரை வழிநடத்திய முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எழுதிய நூல் வெளியிடப்பட்டது.

"நாட்டுக்கு இராணுவத் தளபதியின் வாக்குறுதி அடுத்த இராணுவத் தளபதிக்கு நான் இந்தப் போரை விட்டு விடமாட்டேன்" என அந்த நூலுக்குப் பெயரிடப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி கேட்போர் கூடத்தில் இந்த வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர பிரதம விருந்தினராகவும், பாதுகாப்புச் செயலர் எயர் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்த கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இலங்கையின் நவீன வரலாற்றில் ஒரு தீர்க்கமான காலகட்டத்தில் தனது அனுபவங்களையும் தான் அனுபவித்த தலைமைத்துவ சவால்கள் தொடர்பிலும் பீல்ட் மார்ஷல் பொன்சேகா உரையாற்றினார். (எ-44)

## 'டித்வா' புயல் தாக்கம் கடற்கரைகள் மாசு!

கொழும்பு,டிசெ.11
'டித்வா' சூறாவளியின் தாக்கத்தால் இலங்கையின் கடற்கரைப் பகுதியில் மொத்தம் 143.03 கிலோமீற்றர் தூரம் மாசுபட்டுள்ளதாக கடற்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்தப் பாதிப்பை மீட்டெடுக்க சுமார் 5,280 மனித மணிநேரம் தேவைப்படும். கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், கற்பிட்டி மற்றும் கிழக்கு மாகாணம் உள்ளிட்ட கடற்கரைப் பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு, மண்சரிவு மற்றும் வீடுகளிலிருந்து வந்த கழிவுகள் ஆறுகள் மூலம் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டு கடற்கரையில் குவிந்துள் என. மேலும், பருவமழை காரணமாக இந்தியக் கடற்கரையிலிருந்து குப்பைகள் அடித்துவரப்பட்டமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

குவிந்துள்ள இந்தக் கழிவுகளை அகற்றும் பணிகள் குறைந்தது மூன்று வாரங்கள் நீடிக்கும் என்றும், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அதிகாரசபையின் 13 பிராந்திய அலுவலகங்களின் உதவியுடன் கழிவுகளை மறுசுழற்சி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## இலங்கையைக் கட்டியெழுப்ப சஜித் சர்வதேச உதவிகோரல்

கொழும்பு,டிசெ.11
டித்வா புயலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் இறங்கியுள்ளார்.

இதற்கமைய கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளுடன் அவர் தொடர்சந்திப்புகளில் ஈடுபட்டுவருகின்றார்.

இதன் மற்றுமொரு அங்கமாக இலங்கைக்கான பங்களாதேஷ் தூதுவர், அந்தலிப் எலியாஸை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து சஜித் சந்தித்தார். இலங்கை மீண்டெழுவதற்குத் தேவையான பக்க பலத்தைப் பெற்றுத் தருமாறும் பங்களாதேஷ் தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார். இதற்கு முன்னர் இந்தியா, கனடா, அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளின் தூதுவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சந்திப்புகளை நடத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)




## காவு வாங்கினது கயிறா?

எதையுமே உடனுக்குடன செய்துமுடிக்கிற பழக்கம் எங்கட அரசாங்க டிப்பார்ட்மெண்டுகளில இருக்கு. எதையுமே ஆடி அசைஞ்சுதான் செய்வினம். அதுக்குள்ள அந்த விசயம் ஆறி, பழங்கஞ்சியாப்போடும். அப்பிடிப் பழங்கஞ்சியானால்கூட பரவாயில்லை, ஆனால் எத்தினையோ பேர் சொல்லியும், முறைப்பாடு செய்தும் உந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காரர் (ஆர்.டி.ஏ) வேலையிலை காட்டின மெத்தனத்தால நேற்று நெடுந்தீவில ஒரு உயிர் அநியாயமாப் பறிபோயிருக்குது. நெடுந்தீவில இருந்து வன்னியில மகளைப் பாக்கிறதுக்காக தேங்காய் மூடையோட வெளிக்கிட்டவரை அநியாயமாப் பலியெடுத்திருக்குது ஆர்.டி.ஏ. காரரின்ர அலட்சியம். யாழ்ப்பாணம் வாற படகில அவர் ஏறப்போகேக்க, படகுகளை இறங்குதுறையோட சேர்த்துக் கட்டிறதுக்குப் பாவிக்கிற கயிறுகள் அங்கையும் இஞ்சையும் அசைஞ்சிருக்குது. மூடையோட போனவரால கயிறுகள் எங்காலிப்பக்கம் அசையுது எண்டதைக் கவனிக்கேலாமல் தடுக்குப்பட்டு அப்பிடியே கடலுக்க விழுந்திட்டார். பிறகுஅவரைப் பிணமாத்தான் எடுத்தவை.

அவர் கயித்தில கால்தடுக்கி விழுந்ததுக்கும், ஆர்.டி.ஏ. காரருக்கும் என்ன சம்பந்தம் எண்டுதானே நினைக்கிறியள். சம்பந்தம் இருக்கு. மற்ற இறங்குதுறையளில இருக்கிறமாதிரி, நெடுந்தீவு இறங்குதுறையில படகுகளைக் கட்டிறதுக்குத் தூண், கப்பு மாதிரி வசதியில்லை. அதால இறங்குதுறையின்ர ரண்டு பக்கமும் நிக்கிற படகுகளைப் பிணைச்சுக் கயித்தால கட்டிவிடுவினம். அதால இந்தப் படகுகளின்ர கயிறு நடுவில இருக்கிற இறங்குதுறையிலதான் குறுக்கும் நெடுக்குமா இருக்கும். இப்பிடி ஒரு படகை இன்னொரு படகோட பிணைச்சு விடுறதால, ஏதும் ஒரு படகு வெளிக்கிடேக்க இறங்குதுறையில இருக்கிற கயிறு மேல எழும்பும், அங்கால இஞ்சால அசையும். எப்ப கயிறு மேல வரும், எப்ப,எப்பிடி ,எந்தப்பக்கம் அசையும் எண்டதெல்லாம் ஒருத்தராலையும் அனுமானிக்க ஏலாது. இப்பிடி இறங்குதுறையில கயிறும் அங்கையும் இஞ்சையுமெண்டு ஆடுறதால கனபேர் விழுந்தெழும்பி காயப்பட்டிருக்கினம்.

நெடுந்தீவில இருந்து ஓடுற படகுகளுக்கும், இறங்குதுறைக்கும் பொறுப்பெண்டவகையில் ஆர்.டி.ஏ.காரருக்கு, பிரதேசசபைத் தவிசாளர் இந்த விசயத்தைச் சொல்லி "படகுகளை ஒழுங்காக் கட்டி வைக்கக்கூடிய மாதிரி ஏற்பாடு செய்யுங்கோ. இல்லாட்டி ஆரும் கயிறு தடக்கி கடலுக்க விழுந்தால் ஒண்டும் செய்யேலாது" எண்டு கோரிக்கை வைச்சிருக்கிறார். "ஓம் அதெல்லாம் கெதியில செய்வம்"எண்டு சொன்னதோடு ஆர்.டி.ஏ.காரர் அந்த விசயத்தையே மறந்துபோட்டினம். ஆனாலும் தவிசாளர் விடேலை, போன செப்ரெம்பர் மாதம் திரும்ப ஒரு கடிதம் போட்டு, இறங்குதுறையில படகுகளைக் கட்டுறதுக்கும், கயிறு தடக்கி சனம் விழாமல் தடுக்கவும் அவசரமா ஏதும் ஏற்பாடு செய்யச் சொல்லிக் கேட்டிருக்கிறார். அதுக்கும் ஆர்.டி.ஏ.காரர் ஒரு மறுமொழியும் சொல்லேலை. பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கையும் எடுக்கேலை. இப்பிடி அவையள், தங்களுக்கு முறைப்பாடுகள் வந்தும் உந்தப் பிரச்சினையைத் தீர்க்காமல் இழுத்தடிச்சதாலதான் நேற்று ஒரு உயிர் அநியாயமாப் பறிபோயிருக்கு. இனி யாவது வேற உயிர்களை அந்தப் படகுகளின்ர கயிறுகள் காவு வாங்கமுதல் ஆர்.டி.ஏ.காரர் நடவடிக்கை எடுப்பினமோ?

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும், . தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சிதரும் செய்தி வந்துசேரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** இன்று பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம்எதிர்பார்த்தஉதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் அவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. நண்பர்களிடமிருந்து எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்புக் கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். கணவன்–மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டு.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகளை பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்துசேரும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் சற்று இறுக்கமான சூழ்நிலையே காணப்படும். வாழ்க்கைத்துணை வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**மகரம்:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். சிலருக்கு நண்பர்கள்மூலம் பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். அவர்களின் உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். நண்பர்களால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

# 'கலைமுகம்' உரையாடல் அரங்கு




யாழ்ப்பாணம்,டிசெ.11

'கலைமுகம்' கலை இலக்கிய சமூக இதழ் தொடர்பான உரையாடல் அரங்கு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல.286, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது. நா.நவராஜ் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் அமுத மலரில் வெளிவந்த சிறுகதைகள் தொடர்பில் ரக்ஷானா ஷரிபுத்தீன்,சி.விமலன் ஆகியோரும், நேர்காணல்,பத்தி தொடர்பில் சி.ரகுராமும், கட்டுரைகள் தொடர்பில் ந.குகபரன், தி.செல்வமனோகரன் ஆகியோரும், கவிதைகள் தொடர்பில் சு.குணேஸ்வரனும் உரையாற்றவுள்ளனர். சிறப்புரையை 'வாசிப்பு எனும் அசைவியக்கம் பயிற்சிப்புத்தகப்பண்பாட்டில்கலை இலக்கிய சஞ்சிகைகள்' எனும் பொருளில் பா.அகிலன் ஆற்றுவார். நிகழ்வில் கலைமுகம் இதழின் வாசகர்கள்,படைப்பாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

யாழ்ப்பாண நீரிழிவுக் கழகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, நயினாதீவு ஸ்ரீ நாக பூசணி அம்மன் கோவில் அறங்காவலர் சபையால், வருமானம் குறைந்த சிறுவர் நீரிழிவு நோயாளிகளுக்காக ஒரு இலட்சம் ரூபா நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. (க-இ)





பச்சிலைப்பள்ளிப் பிரதேச மக்களின் சுகாதார நலன்கருதி பிரதேச செயலக சமூக மருத்துவ அலகினரால் வெள்ள அனர்த்தத் தொற்று நோய்கள் மற்றும் ஆரோக்கிய வாழ்க்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு இயக்கச்சிப் பிரிவில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் சமூக மருத்துவ உத்தியோகத்தர் டாக்டர் பா.தீபேகா, சுதேச வைத்திய அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். (ச-41-9)

# பசுமை இயக்கத்தால் 110 பேருக்கு உலருணவு

யாழ்ப்பாணம்,டிசெ.11

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் 'அற்றார் அழி பசி தீர்த்தல்' செயற்றிட்டத்தின்கீழ், டித்வா புயலால் பாதிக்கப்பட்ட, பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றுள்ள 110 குடும்பங்களுக்கு, அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன. யாழ். மாவட்டத்தின் தாழ்நிலப் பிரதேசங்களான நாவாந்துறை, கல்லுண்டாய் ஆகிய பகுதிகளில் இருந்து பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டனர். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் பொதிகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதியை பொ. பரமேஸ்வரனின் பிறந்ததினத்தை முன்னிட்டு அவரது பிள்ளைகள் வழங்கியிருந்தனர். (க-இ)





## வாய்க்கால் புனரமைப்பு

சாவகச்சேரி, டிசெ.11

சீரற்ற காலநிலையினால் வெள்ளம் வழிந்தோட முடியாமல் தடையாகக் காணப்பட்ட கொடிகாமம் வடக்குப் பிரிவிலுள்ள வாய்க்கால் நேற்றுப் புதன்கிழமை புனரமைக்கப்பட்டது. தென்மராட்சி பிரதேச செயலர் எவ்.சீ.சத்தியசோதி, சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் பொ. குகதாசன் மற்றும் படையினர் ஆகியோர் தலைமையில் இந்தச் செயற்பாடு இடம்பெற்றது. (ச-41-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## இனியும் அவர்களை வதைக்காதீர்!

மலையகத்தில் மக்களுக்கு பாதுகாப்பான வாழ்விடங்கள் வழங்கப்படாவிட்டால், அவர்களுக்குத் தேவையான காணிகளை வடக்கில் தேடவேண்டியிருக்கும் என்று தெரிவித்திருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், மலையகத்தை நீண்டகாலம் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன். ஈழத்தமிழர்களும் மலையகத் தமிழர்களும் மொழியாலும், உணர்வாலும் ஒன்றானவர்கள்தான். அதற்காக, ஒரு மந்தைக்கூட்டத்தை நகர்த்தி வருவதைப்போன்று, மக்கள் கூட்டத்தை ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு நகர்த்திவிடமுடியாது. இதில் ஏராளமான நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. எனவே, இந்த விடயத்தில் இருக்கக்கூடிய முரண் நிலைகளையும், அந்த முரண்நிலைகளுக்கு வழங்கப்படவேண்டிய கண்ணியத்தையும் மனோகணேசன் உய்த்துணர வேண்டும்.

இலங்கையின் பணப்பயிர் என்று சொல்லக்கூடிய தேயிலைத் தோட்டங்களில், தங்களின் குருதியைச் சிந்தி உழைத்தவர்கள் மலையக மக்கள். நாட்டின் பெருவாரியான வருவாயில் அவர்களுக்குக் கணிசமான பங்கும் உரித்தும் உள்ளது. மலையகம் அவர்களின் அடையாளம் என்ற ரீதியில், அவர்களை சுய நிர்ணயம் மிக்க தேசிய இனமாக அங்கீகரித்து 'ஏற்றுக்கொண்டு' மலையகத்தில் அவர்களுக்கான வாழ்வியலை உச்சப் பாதுகாப்புடன் ஏற்படுத்திக் கொடுப்பதே பொருத்தமானது. அதைவிடுத்து, அவர்களை இன்னபல நிலங்களில் குடியேற்றுதல் என்பது பொருத்தமாக இருக்காது. அத்தகைய செயற்பாடு அரசியல் உட்பட பல வழிகளில் அவர்களைப் பலவீனப்படுத்தவே செய்யும். மலையக மக்களின் பாதுகாப்பான வாழ்க்கை முறைக்கு சற்றும் குறைவில்லாதது அவர்களின் அரசியல் உரிமை மற்றும் பிரதிநிதித்துவம் கட்டிக் காக்கப்படுதல். ஆதலால், 'மலையகம்தானே' என்ற மெத்தனப் போக்கில் கருத்துகளை வெளிப்படுத்துதல் அபத்தம்.

அதேநேரம், நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசனின் வலியுறுத்தலில் ஒரு நியாயம் இருக்கவே செய்கின்றது. ஏனெனில், ஐந்தல்ல பத்தல்ல இருநூறு ஆண்டுகாலமாக சீரழிந்த வாழ்க்கைமுறையை அவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். எத்தனை போராட்டங்கள், எத்தனை வெள்ளப் பேரிடர்கள், எத்தனை மண்சரிவுகள், எத்தனை கோரிக்கைகள், எத்தனை மன்றாட்டங்கள். ஆனால், அத்தனையும் தாண்டி அறுநூறுக்கும் அப்பாற்பட்ட பலியெடுப்புகள் சம்பவித்திருக்கின்றன என்றால், யார்தான் மாற்றுநிலம் தொடர்பில் சிந்திக்கமாட்டார்கள். லயங்கள் என்று சொல்லப்படக்கூடிய 'பிரிட்ஷார்' கால அடக்குமுறைக் குடில்களில்தான் இன்றும் பல்லாயிரம் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தனி நிலம், வீடு, கழிப்பறை, கிணறு இவையெல்லாம் இன்றளவும் அவர்களின் கனவுகளே.

மக்களை மீண்டும் ஆபத்தான இடத்தில் குடியமர்த்த மாட்டோம் என்றும், பாதுகாப்பான இடங்களில் கண்ணியமான முறையில் குடியமர்த்துவதே தமது இலக்கு என்றும் ஜனாதிபதி அநுர அண்மையில் அறிவித்துள்ளார். கடந்த அரசாங்கங்கள் அவ்வளவு இலகுவில் வெளிப்படுத்தாத வாக்குறுதிகள் இவை. அந்த வாக்குறுதிகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயலுறுப்பெறச் செய்யவேண்டும். ஏனெனில், மலையக மக்கள் இந்த நாட்டின் சுமைகள் அல்ல. மாறாக சுமைதாங்கிகள். அவர்களின் தோளில் இருப்பது தேயிலைக்கூடைகள் அல்ல. இந்த நாட் டின் பொருளாதாரம். ஒருவகையில் அது எமது வாழ்வாதாரம்.

செய்தி : 021-493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

நம்முடைய கனவுகளை லட்சியங்களை அடைய இடையிலுள்ள தடைக் கற்களை உடைக்க வேண்டும்.

-அம்பேத்கார்-





## நிவாரணம் தொடர்பாக மோசடி விளம்பரங்கள்

### மகளிர், சிறுவர் விவகார அமைச்சு எச்சரிக்கை

**கொழும்பு, டிசெ.11**

**வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக்கூறி, பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து தனிப்பட்ட தகவல்களைக் கோரும் பல குறுஞ் செய்திகள், வட்ஸ்அப் மற்றும் முகநூல் உள்ளிட்ட பிற சமூக ஊடக தளங்கள்மூலம் பரவிவருவது அவதானிக் கப்பட்டுள்ளது.**

இதுதொடர்பாக மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பேரிடருக்குப் பிந்தைய நிவாரண செயற்பாடுகளுக்குத் தேவையான தகவல்களைச் சேகரிக்கும் பணியானது, அமைச்சகத்துடன் இணைந்தகள் அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்களின் ஆதரவுடன், அரசாங்கத்தால்நிறுவப்பட்ட பொறிமுறையின் ஒரு பகுதியாக உத்தியோகபூர்வமாக மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் மட்டுமே நடத்தப்படுகிறது. பொதுமக்கள் இவ்வாறான மோசடிச் செய்திகளால் ஏமாறவேண்டாம். அங்கீகரிக்கப்படாத நபர்களுடன் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்து கொள்வதைத் தவிர்க்கவேண்டும். நாடு முழுவதுக்கும் சவாலான இந்தக் காலகட்டத்தில், பாதிக்கப்பட்ட சமூகங்கள் மீண்டும் பாதிக்கப்படுவதைத் தடுக்க, இத்தகைய வஞ்சகமான செயல்களிலும் மோசடிகளிலும் ஈடுபடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

## 10 நாள்களில் 50,222 சுற்றுலாவிகள்

கொழும்பு.டிசெ.10

இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 50.222 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்தே வருகை தந்துள்ளனர்.

இதற்கமைய இந்தியாவிலிருந்து 10.453 சுற்றுலாப் பயணிகள் குறித்த காலப் பகுதியில் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (ச)

## உதவித்தொகையை விரைந்து பெறுங்கள்

சாவகச்சேரி, டிசெ.11

தென்மராட்சிப் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் டிசம்பர் மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவித்தொகை மற்றும் நோய்க்கான கொடுப்பனவுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கொடுப்பனவுகளை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலக சமூக சேவைகள் அலகினர் அறிவித்துள்ளனர். வருட இறுதிக்கணக்குகளை முடிவுறுத்துவதற்காக கொடுப்பனவுகளை விரைவில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (ச-41-9)

## கடற்படையினருக்கு பதவியுயர்வு

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனாகொடவின் பரிந்துரைக்கமைய 17 அதிகாரிகள் மற்றும் 2,069 சிரேஷ்ட, கனிஷ்ட மாலுமிகள் என மொத்தம் 2,086 கடற்படையினருக்கு அடுத்த தரத்துக்கான பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்படையின் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு குறித்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)



## ஐரோப்பிய ஒன்றியத்தால் 1.8 மில். யூரோ நிதியுதவி

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட கடும் மண்சரிவு மற்றும் வெள்ளப் பேரழிவுகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் 1.8 மில்லியன் யூரோ அவசர நிதியுதவியை விடுவித்துள்ளது. மிகவும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு அத்தியாவசிய நிவாரணங்களை வழங்குவதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதோடு, இதில் 500,000 யூரோ சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் ஊடாக வழங்கப்படவுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக நின்று, அவர்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவுவதாக ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் ஹாட்ஜா லஹ்பிப் தெரிவித்துள்ளார். (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை – கார்த்திகை 26
12.12.2025
சுபநேரம் : 06.16 - 07.46
ராகுகாலம் : 10.46 - 12.16

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் அதிக மழைவீழ்ச்சி வெள்ளத்தில் எல்லைக் கிராமங்கள்

முல்லைத்தீவு,டிசெ.11

**முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதால், மாவட்டத்தின் எல்லைக் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அத்துடன் குளங்களின் வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.**

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்துக்கு உட்பட்ட ஒலுமடு, கீரிசுட்டான், பட்டிக்குடியிருப்பு, கற்குளம், மருதோடை ஒதியமலை, நைனாமடு, குளவிசுட்டான் பெரியமடு, சன்னாசிபரந்தன், போன்ற கிராமங்கள் தொடர்ச்சியான மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் உள்ள சிறு குளங்களும் நிரம்பியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு மற்றும் முத்துஐயன்கட்டு குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், இரண்டு குளங்களின் வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன. எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் தாழ்நிலப்பிரதேசங்களில் இருக்கும் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்.

வவுனியா வடக்குப் பகுதியில் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதனால் குருவிச்சை ஆற்றுப்பகுதிகளில் வெள்ளம் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே ஒட்டுசுட்டான் பண்டாரவன்னிப் பகுதியில் வசிக்கும் மக்கள், வெள்ள இடர் ஏற்படின் உடனடியாக கருவேலன் கண்டல் பாடசாலையில் தங்கவேண்டும். கோடாலிக்கல்லுக் குளத்தின் அணைப்பகுதி ஏற்கனவே உடைந்துள்ளதால், தொடர்ச்சியான கடும் மழையால் பெருமளவு நீரோட்டம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கோடாலிக்கல்லு முன்புறத்தில் உள்ள முள்ளியவளை - நெடுங்கேணி வீதி நீரில் மூழ்கியுள்ளது. எனவே, இந்த வீதியைப் பயன்படுத்தும் பயணிகள் முக்கியமாக இரவு நேரங்களில் பயணிப்பதைத் தவிர்க்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-19)

## காரைநகர் பிரதேசசபை பட்ஜெட் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.11

காரைநகர் பிரதேசசபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வரைவு நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பிரதேசசபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பொதுமக்கள் இதனைப் பார்வையிடலாம் என்று தவிசாளர் கிருஷ்ணன் கோவிந்தராசன் அறிவித்துள்ளார். (க-இ)



## இடைத்தங்கல் முகாம்களில் ம.உ.ஆணைக்குழு ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ.11

யாழ். மாவட்டத்தில் அனர்த்தம் காரணமாக மக்கள் தங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட தற்காலிக இடைத்தங்கல் முகாம்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலக இணைப்பாளர் ரி.கனகராஜ் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார். சாவகச்சேரிப் பகுதியிலுள்ள 6 இடைத்தங்கல் முகாம்களைப் பார்வையிட்டதுடன் அங்குள்ள மக்களின் உணவு மற்றும் சுகாதார மேம்பாடுகள் குறித்து ஆராய்ந்தார். (ச-41-27)

## கொலைக்கு நீதிகோரிப் போராடிய ஐவர் மீதான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.11



புங்குடுதீவில் கொலை செய்யப்பட்டவரின் உடலை வைத்து வீதியை மறித்துப் போராடியமைக்கு எதிராகச் சட்டவிரோதக்குழுவாக ஒன்றுகூடி அரச அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின்கீழ் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் ஐவருக்கு எதிராக வழக் குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளர் ஒருவர் கடந்த ஓகஸ்ட் 10 ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து வன்முறைக் குழுவொன்றால் கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். கொலையைத் தடுக்கச் சென்ற அவரது உறவினர்கள் நால்வர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்திருந்தனர்.

அவரது படுகொலைக்கு நீதிகோரி அவரது பூதவுடலைக் குறிகாட்டுவான் பிரதான வீதியில் பெற்றோல் நிரப்பும் நிலையம் முன்பாக நடுவீதியில் வைத்து கொல்லப்பட்டவரின் குடும்ப உறவுகளும் 150 இற்கும் மேற்பட்ட பொதுமக்களும் இணைந்து போராட்டம் நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில் படுகொலை செய்யப்பட்டவரின் பூதவுடலை வைத்து வீதியை மறித்துப் போராடியமைக்கு எதிராகச் சட்டவிரோதக் குழுவாக ஒன்றுகூடி அரச அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் தீவகம் சிவில் சமூகம் அமைப்பின் செயலாளர் மாணிக்கவாசர் இளம்பிறையன், மேற்படி அமைப்பின் உப தலைவர் கருணாகரன் குணாளன், வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் மற்றும் இரு பொதுமக்களின் பெயர்கள் குறிப்பிட்டு ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிமன்றில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அடுத்த வருடம் மார்ச் மாதம் 10 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (ச-66)



பசுமைத்திட்டத்தின் கீழ், 1000 மரக்கன்றுகளை நடுகை செய்யும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் காங்கேசன்துறை உதய சூரியன் சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. (க-100)

## ரூ. ஒரு மில்லியன் மருந்துப்பொதி மன்னார் ஆயரால் நன்கொடை

மன்னார்,டிசெ.11

டித்வா புயல் மற்றும் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, மன்னார் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு, ஒரு மில்லியன் ரூபா மதிப்புள்ள மருந்துப் பொருள்களை, மன்னார் ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம், ஆயர் இல்லத்தில் வைத்து நேற்றுமுன்தினம் நன்கொடையாக வழங்கினார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.எச்.எம். அஸாத் ,மருத்துவர் ரூபன் லெம்பேட் மற்றும் மருத்துவமனை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் மருத்துப் பொருள்களை ஆயரிடம் பெற்றுக் கொண்டனர். மன்னார் ஆயர் இல்ல நிதிப் பொறுப்பாளர் அருட்தந்தை சுரேன் ரவல் அடிகளாரும் இதில் பங்கேற்றார். (க-56)

## சுகாதார விதிமீறல்: உணவகம் மீது சட்டநடவடிக்கை



மன்னார்,டிசெ.11

மன்னார் நகர்ப் பகுதியில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாது இயங்கிவந்த உணவகம் ஒன்றுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய நேற்றுமுன்தினம் உணவகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது பல்வேறு சுகாதாரக் குறைபாடுகள் அடையாளப்படுத்தப்பட்டு சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22,918 குடும்பங்கள் முல்லைத்தீவில் பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ.11
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 27,28,30 ஆம் திகதிகளில் ஏற்பட்ட மழை வெள்ளப்பெருக்கு காரணமாக 22,918 குடும்பங்களைச் சேர்ந்த 67 ஆயிரத்து 340 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த மக்களின் 907 வீடுகள் பகுதி அளவிலும் 5 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. கரைதுறைப்பற்றுப்பிரதேசத்தில் 4568 குடும்பங்களைச் சேர்ந்த 14ஆயிரத்து 650 பேரும்,புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 5476 குடும்பங்களைச் சேர்ந்த 15ஆயிரத்து 392 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 5569 குடும்பங்களைச் சேர்ந்த 17ஆயிரத்து 460 பேரும், துணுக்காய் பிரதேசத்தில் 2418 குடும்பங்களைச் சேர்ந்த 5ஆயிரத்து 868 பேரும்,மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் 2241 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 38 பேரும்,வெலிஓயா பிரதேசத்தில் 2556 குடும்பங்களைச் சேர்ந்த 6ஆயிரத்து 932 பேரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். (ச-19)

## பணத்தகராறு; இளைஞன் கொலை

கொழும்பு, டிசெ. 11
பாணந்துறை தெற்கு பொலிஸ்பிரிவுக்குட்பட்ட வலான வீதி பகுதியில் இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பணத்தகராறு முற்றியமையி னால் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
உயிரிழந்தவர் கம்புருகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதானவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சம்பவத்துடன் தொடர்புடைய 54 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 07 . 1952



மறைவு 07 . 12 . 2025

செல்வராசா நாகேஸ்வரி

நல்லூர் அரசடி வீதி, 5ம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா நாகேஸ்வரி அவர்கள் கடந்த (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லூர் அரசடி வீதி,
5ம் ஒழுங்கை
தகவல்:
குடும்பத்தினர்
(CR/60135) J-1

## டித்வா புயல் எதிரொலி

# 20% நிலப்பரப்பு நீரில் மூழ்கியது!

**கொழும்பு, டிசெ. 11**
**நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 20 சதவீதம் அல்லது ஐந்தில் ஒரு பங்கு நீரால் மூழ்கியுள்ளதுடன், வீடுகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு குறிப்பிடத்தக்க சேதங்கள் ஏற்பட்டுள்ளன.**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் வெளியிட்ட புதிய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
புயலால் ஏற்பட்ட வெள்ள நீர் 1.1 மில்லியன் ஹெக்ரேயருக்கும் அதிகமான நிலப்பரப்பை பாதித்துள்ளது.
இதன்படி நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 20 சதவீதம் அல்லது ஐந்தில் ஒரு பங்கு நீரில் மூழ்கியுள்ளதுடன், வீடுகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு குறிப்பிடத்தக்க சேதங்கள் ஏற்பட்டுள்ளன.
இதற்கிடையில் 'டித்வா' சூறாவளி காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2.3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெண்கள் எனவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் தெரிவித்துள்ளது. (ச-இ)

வேலையாட்கள் தேவை
கட்டுமான நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
(மேசன், கூலி)
தொடர்பு: 072 03 73 559
(CS 30756) A

மணமகள் தேவை
பூரட்டாதி நட்சத்திரம் 3ம் பாதம் 1985ம் ஆண்டு பிறந்த (V) மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:-
077 027 6702
(CS/30751) J-1

25ஆம் ஆண்டின் நினைவுகளிலே...!

மண் மகிழ 11 . 11 . 1949



வான்புகழ 17 . 11 . 2000

அமரர்
சிதம்பரப்பிள்ளை செல்வரத்தினம்
திதி : ஸப்தமி - 11.12.2025

ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்...
காலங்கள் கனவாகிப் போனாலும்...
ஆயிரம் உறவுகள் வந்து போனாலும்...
மாறாது உங்கள் நினைவுகள் என்றுமே...
அஞ்சலி செய்கின்றோம் நெஞ்சம் நெகிழ்ந்திடவே...

20A, ஈச்சமோட்டை
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
077 749 7187
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
(CS/30593) J-1

மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 10 . 1956



மறைவு 10 . 12 . 2025

வேலாயுதபிள்ளை யோகநாயகி

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை யோகநாயகி நேற்று (10.12.2025) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னப்பு - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை அவர்களின் அன்பு மனைவியாரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மகேஸ்வரி, இந்திராணி, கந்தசாமி, சற்குணநாதன் மற்றும் நவரட்ணம், செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிரிஜாழினி, யாதுசன் (தபால் ஊழியர், கோப்பாய்), கபிலாயினி, காலஞ்சென்ற மோகனப்பிரியன் ஆகியோரின் அன்பு தாயாரும், திருமாறன், சுரேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், மிதுனஜா, டினுஸ்கான், சயூரி, நக்ஷயன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாவலக்கட்டை லேன்,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
தகவல் :
குடும்பத்தினர்.
மகன் - 077 4421 618
(CS 30755) A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி




## இராசரத்தினம் தர்மராசா (தம்பி)

உரும்பிராயைச் சேர்ந்த
இராசரத்தினம் தர்மராசா
அவர்கள் காலமானதையிட்டு
ஆழ்ந்த துயரடைவதோடு
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த இரங்கலையும்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 18.12.1957
மறைவு 09.12.2025

பிரிவால் துயருறும்
**கஜன் குடும்பம் (கனடா)**

# மரண அறிவித்தல்



## இராசரத்தினம் தர்மராசா (தம்பி)

உரும்பிராய் மேற்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் தர்மராசா அவர்கள் கடந்த (09.12.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - சரஸ்வதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்வர்களான கணேசபிள்ளை - இராசலட்சுமி தம்பதியரின் மருமகனும், செல்வராணியின் கணவரும், நிறஞ்சனா (கனடா), குமரேசன் (கனடா), மதிறஜனி, காலஞ்சென்றவர்களான ஆனந்தரூபி, பத்மரூபி மற்றும் கமலரூபி, காண்டீபன் ஆகியோரின் சகோதரரும், சுகிர்தன், வைஷ்ணவி, சஜீவன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜீபா, செந்தூரன், ஆரணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதிரன், ஆதிரா, சேஜஸ்வின், அஸ்விகா, கிருத்திக், ஆதிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 18.12.1957
மறைவு 09.12.2025

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS/60134) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு கிளி. நோயாளர் நலன்புரிச் சங்கம் உதவி

கிளிநொச்சி.டிசெ.11
கிளிநொச்சி மாவட்டத்தில் இடரால் பாதிக்கப்பட்டு, வீட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சுமார் 200 க்கும் மேற்பட்ட நோயாளர்குடும்பங்களுக்கு, மருத்துவர்களின் சிபார்சுக்கு அமைவாக உதவிகள் வழங்கப்பட்டன.


முழங்காவில், பூநகரி, பளை, கனடாவளை, தர்மபுரம், அக்கராயன், உருத்திரபுரம், கரைச்சி உள்ளிட்ட பிரதேசங்களில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் அந்தந்த பிரதேச மருத்துவமனைகளின் மருத்துவர்கள் இணைந்து பாதிக்கப்பட்ட தரப்பினர்களிடம் உதவிகளை வழங்கினர். (சு-214)




இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சங்கானை மற்றும் யாழ். கிளைகள் ஆகியனவற்றால் சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளைத் துப்புரவு செய்யும் பணிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப் பட்டன. இந்தப் பணியில் சிறீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-27)







கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கிறிஸ்தவ மன்றம் நடத்திய ஒளிவிழா, கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில், கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள், விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன. (சு-27)

சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு சரசாலையூர் கி.கலைதாசன் எழுதிய "உணர்வின் மலர்கள்" எனும் பாடல் இசை இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு மட்டுவில் கமலாசனி வித்தியாலய சுப்பையா அரங்கில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-41-9)



சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட சங்க அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் 91பேருக்கு அத்தியாவசிய உணவுப்பொருள்கள் சங்க மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன. (ச-41-9)

தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி அலகினரால் 2025ஆம் ஆண்டுக்கான ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளியின் வீட்டுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு கெற்பேலி கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், வங்கி முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-41-9)







சாவகச்சேரி கோவிற்குடியிருப்புப் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள் அப்பகுதியில் வதியும் நலன்விரும்பியால் கச்சாய் வீதி முருகன் சனசமூகநிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது. (ச-41-9)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியரும், சைவப் புலவருமான திருமதி.சசிலேகா ஜெயராஜன் கலந்துகொண்டு ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தினார். (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மண்சரிவு அபாயம்

# 15,000 இடங்கள் அடையாளம்

கொழும்பு, டிசெ.11

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இதுவரை சுமார் 15,000 மண்சரிவு அபாயமுள்ள இடங்களை அடையாளம் கண்டுள்ளதுடன், அந்த இடங்களில் இருந்த சுமார் 5,000 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

குறித்த இடங்களில் வசிக்கும் மக்கள் கட்டாயமாக அந்த இடங்களிலிருந்து வெளியேறவேண்டும் என அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் கலாநிதி வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார்.

வடகிழக்குப் பருவப்பெயர்ச்சி மழை ஓரளவுக்குத் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதால், அபாயகரமான இடங்களில் வசிக்கும் மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறும், பாதுகாப்பான இடங்களில் உள்ள மக்கள் அங்கேயே தங்கியிருக்குமாறும், தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். இல்லாவிடின் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## யுனெஸ்கோ

# பாரம்பரிய பட்டியலில் தீபாவளிப் பண்டிகை!

புதுடெல்லி, டிசெ. 11

யுனெஸ்கோவின் பாரம்பரிய பட்டியலில் தீபாவளிப் பண்டிகை சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை வரவேற்புத் தெரிவித்துள்ளது.

யுனெஸ்கோ அமைப்பின் கூட்டம் இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் நடைபெற்று வருகின்றது. இதன்போதே, யுனெஸ்கோவின் பாரம்பரிய பட்டியலில் தீபாவளிப் பண்டிகை சேர்க்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை, இந்திய அரசாங்கங்கள் வரவேற்பைத் தெரிவித்துள்ளன. (ம)



*தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் நிதியனுசரணை யுடன் மன்னார் மாவட்டக் கிளையால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்க ளுக்கான உலருணவுப் பொதிகள் மன்னார் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. (ச-41-56)*



# பணத்தகராறு; இளைஞன் கொலை

கொழும்பு, டிசெ. 11


பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலான வீதி பகுதியில் இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பணத்தகராறு முற்றியமையினால் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவர் கம்புருகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதானவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய 54 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 03 . 1951



மறைவு
10 . 12 . 2025

### நல்லதம்பி நடனசபேசன்

அல்லைப்பிட்டி 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி நடனசபேசன் அவர்கள் நேற்று (10.12.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் நல்லதம்பி - சின்னதங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், அமரர்களான கிருஷ்ணபிள்ளை - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், ஜெயந்தினி, ராஜினி (பிரான்ஸ்), கஜந்தினி (கோப்பாய் பிரதேச வைத்தியசாலை ஊழியர்), நிஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயக்குமார் (வீதி அபிவிருத்தி அதிகார சபை), ரவீந்திரன் (பிரான்ஸ்), விஜிதரன், மகாவீர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லஷாந், பபிஷாந், ஸஜீந், சாகித் (பிரான்ஸ்), சங்கீரத் (பிரான்ஸ்), சஸ்விகா (பிரான்ஸ்), சஸ்மிதா, விகிசனன் ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர்களான ராமலிங்கம், சிவபாக்கியம், தவலிங்கம், செல்வமலர் மற்றும் தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2025) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**அல்லைப்பிட்டி - 01**
**077 6576 091**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CS 30757) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 01 . 1947



மறைவு
09 . 12 . 2025

### சுப்பிரமணியம் இராசகுலேந்திரன்

நல்லூரை பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசகுலேந்திரன் அவர்கள் கடந்த 09.12.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், நவரட்ணம் - றோசலின் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நவமலர் (மலர்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான குணரட்ணம், நவமணி, குணமணி, யோகமணி, மனோன்மணி மற்றும் ரவீந்திரன், பத்மாவதி (சாந்தா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மனோகரன், சுகுமார், சுரேஸ்குமார் மற்றும் நற்குணராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுகிதரன் - சுதாஜினி, வானுஜன் கம்ஷா ஆகியோரின் பப்பாவும், உமாகாந்த், ஸ்ரீகாந்த், ரூபகாந்த், மேனகா, லக்ஸ்மன், கயன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2025) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CS 30757) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்...

2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டனர். இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டு, மல்லாகம் நீதிமன்றத்தில் 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி அறிக்கையிடப்பட்டது.

அத்துடன், லலித் மற்றும் குகன் ஆகியோரின் உறவினர்களால் 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் பெயர் இணைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது, கோத்தாபய ராஜபக்ச மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறு உத்தரவிடப்பட்டது. எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காக தன்னால் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து சாட்சியம் வழங்க முடியாது என்று கோத்தாபய ராஜபக்ச மறுத்து வந்தார்.

இது தொடர்பில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், கடந்த ஜூலை மாதம் 30ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது, 'ஆட்கொணர்வு மனு மீதான வழக்கில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சாட்சியமளிக்கத் தயாராக உள்ளார்' என்று கோத்தாபயவின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தெரிவித்தார். 'எனினும், தற்போதுள்ள பாதுகாப்புக் காரணங்களுக்காக கோத்தாபய ராஜபக்ச யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்குப் பதிலாக கொழும்பு நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்கே தயாராக உள்ளார்' என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா கூறியிருந்தார்.

இதன்போது, இந்தக் கோரிக்கையை ஒரு மாதத்துக்குள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, பொருத்தமான உத்தரவுகளைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவுக்கு மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் அறிவுறுத்தியது. மனுதாரர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி நுவான் போபகேவும் அந்தக் கோரிக்கைக்கு தமது இணக்கத்தை தெரிவித்தார். அதன்படி, மேன்முறையீட்டு மனுவின் விசாரணையை முடிவுறுத்துவதற்கு நீதியரசர்கள் குழாம் முடிவு செய்தது. எனினும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய நேற்று முன்தினம் வரை அந்தக் கோரிக்கை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் கோத்தாபய தரப்பால் சமர்ப்பிக்கப்படவில்லை.

இதையடுத்து, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்துக்கு அமைய இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்ட கால அவகாசம் தொடர்பான கருத்தை, கோத்தாபய தரப்பினர் மீறியுள்ளனர். எனவே, இந்த நகர்த்தல் பத்திரத்தை ஆரம்ப அளவிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் லலித், குகன் தரப்பினரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதையடுத்தே, 'கோத்தாபய ராஜபக்ச நிகழ்நிலை ஊடாக தோன்றி மன்றில் சாட்சியம் வழங்க அனுமதிக்குமாறு' விண்ணப்பம் செய்யப்பட்டது. இந்த விண்ணப்பத்தைத் தொடர்ந்தே, கோத்தாபய ராஜபக்ச யாழ்ப்பாணம் வருகை தருவதில் உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பில் சத்தியக் கடதாசியை மன்றில் சமர்ப்பிக்குமாறு மன்று உத்தரவிட்டது. வழக்கு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது. லலித், குகன் தரப்பினரின் சார்பில் சட்டத்தரணிகள் எஸ்.கே.புரந்திரன், நுவான் போபகே ஆகியோர் முன்னிலையாகினார்கள். கோத்தாபயவின் தரப்பில் சட்டத்தரணிகள் மரியநாயகம் பூரணி, சுரங்க பெரேரா ஆகியோர் முன்னிலையானார்கள். (அ-ம-26)

## இலங்கையில்...

பகுதியில் கடந்த 24 மணிநேரத்தில் 160 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் 99.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

குறித்த காலப்பகுதியில் நயினாதீவில் 90.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 53.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ். நகரில் 51.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் பண்ணையில் 47.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 42.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், பருத்தித்துறையில் 40.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரியில் 32.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நெடுந்தீவில் 28 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், வடமராட்சி அம்பனில் 22 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், மீசாலையில் 20 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (அ-ம-66)

## கிரேக்க...

நிலவியது. அத்தகைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், இலங்கை அரச நிதியை கிரேக்க பிணைமுறிகளில் முதலீடு செய்து நாட்டுக்கு 1.8 பில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட இழப்பை ஏற்படுத்தினார்கள் என நால்வர் மீதும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்த பிணைமுறை பரிவர்த்தனை மத்திய வங்கியின் விதிமுறைகளுக்கும், நிதி அறிக்கை விதிமுறைகளுக்கும் அமைய சட்டபூர்வமாக நடந்த ஒன்று என உயர்நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆயினும், கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு இது தொடர்பான பிறிதொரு வழக்கைத் தாக்கல் செய்திருந்தது.

அந்தக் குற்றப்பத்திரிகை கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவால் நேற்று மீளப்பெறப்பட்டதைத் தொடர்ந்தே இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் உள்ளிட்ட நான்கு பிரதிவாதிகளும் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ-ம-44)

## காணாமல்...

னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்ததாவது:-

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம். ஆனால், எமக்கான நீதி இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. எமது உறவுகளைத் தொலைத்துவிட்டு அனுதினம் அவர்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்றோம். எமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று அரசாங்கம் கூறுகின்ற போதிலும், இதுவரை அற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அரசியற் கைதிகளை விடுவிப்பதற்கு அரசாங்கம் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. பௌத்த மயமாக்கல் நாட்டில் தீவிரம் பெற்று வருகின்றது. எனவே, ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் இந்த விடயத்தில் நீதியாகவும் நேர்மையாகவும் செயற்பட வேண்டும் - என்றனர். (அ-ம-110)

## கயிறு...

உயிரிழந்தவராவார். வன்னியில் வசிக்கும் தனது மகள் மற்றும் தந்தையைக் காண்பதற்காக நெடுந்தீவில் இருந்து நெடுந்தாரகை படகின் ஊடாகப் பயணிப்பதற்குச் சென்றபோதே, பாலத்தில் குறுக்காகக் கட்டப்பட்டிருந்த கயிற்றுடன் தடக்கி கடலுக்குள் வீழ்ந்துள்ளார்.

இந்தத் தகவலை அறிந்து கடற்படையினர் உடனடியாகத் தேடுதல்களை முன்னெடுத்தனர். எனினும் சில மணிநேரத் தேடுதலின் பின்னர் அவர் சடலமாகவே மீட்கப்பட்டார். நெடுந்தீவுப் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இறப்பு விசாரணைகளை தீவக திடீர் மரண விசாரணை அதிகாரி நாகராசா தியாகராசா மேற்கொண்டார். (அ-ம-26-66)

## மணல்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி நகரிலிருந்து இரணைமடு நோக்கி தனது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர், வில்சன் வீதியில் மொட்டை பாலத்துக்கு அருகில் மோட்டார்சைக்கிளை நிறுத்த முற்பட்ட போது, வேகமாக வந்த டிப்பர் அவரை மோதித் தள்ளியுள்ளது. உயிரிழந்தவரின் மனைவி, டிப்பர் வருவதை அவதானித்து வீதியின் மறுமுனைக்கு ஓடி உயிர் தப்பியுள்ளார்.

டிப்பர் வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-316)

## யாழ்....

என்று லலித், குகன் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் கடும் ஆட்சேபனையை முன்வைத்துள்ளனர்.

லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்குத் தொடர்பான விசாரணை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த வழக்கில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து சாட்சியம் வழங்க கோத்தாபய ஆரம்பம் முதல் மறுத்து வருகின்றார். நேற்றைய சமர்ப்பணத்திலும் கோத்தாபய தரப்புச் சட்டத்தரணிகள் இந்த வாதத்தை முன்வைத்தனர்.

இதையடுத்தே, ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய போட்டியிட்டபோது, அவர் பரப்புரை நடவடிக்கைக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். இவ்வாறிருக்கையில், நீதிமன்ற நடவடிக்கைக்காக யாழ்ப்பாணத்துக்கு வர முடியாது என்று அவர் கூறுவது அடிப்படையற்ற விடயம். எனவே இந்தக் கோரிக்கை ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று லலித், குகன் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் கடும் ஆட்சேபனையை முன்வைத்தனர். (அ-ம)

## வெள்ள...

2 ஆயிரத்து 100 ரூபா வீதம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. அந்தத் திட்டத்துக்கான பெயர்ப் பட்டியலே தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் யாருடைய பெயரேனும் தேவையிருந்தும் இணைக்கப்படாதிருப்பின் அல்லது தவறான வழியில் நிவாரணம் கொடுக்க இணைக்கப்பட்டிருப்பின் தகுந்த ஆதாரங்களுடன் அறியத் தருமாறு யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது. யாழ். மாவட்டச் செயலகத்தில் உள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்தில் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது. (அ-ம-26-66)

## வீடு...

பெறப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்படும் நிலையில், அந்தப் பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்களின் கொடுப்பனவு தொடர்பில் பிரதேச செயலகங்களில் பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக நேற்றுத் தகவல்கள் வெளிவந்திருந்தன. ஆனால், வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் உலருணவுக் கொடுப்பனவுக்கான பெயர்ப் பட்டியலே காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. மாறாக 14 ஆயிரத்து 624 வீடுகள் பாதிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு, அவற்றைத் தூய்மைப்படுத்துவதற்காக 36 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி பெறப்பட்டமை தொடர்பான பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை.

உலருணவுக் கொடுப்பனவு வழக்கமான வழங்கப்படும் ஒன்று. அதில் எவரும் முறைப்பாடுகளை முன்வைக்கவில்லை. சர்ச்சைகளும் ஏற்படவில்லை. 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவை மறுத்த குடும்பங்கள்கூட, தமக்கு வெள்ளப் பேரிடரின்போது வழக்கமாக வழங்கப்படும் உலருணவுக் கொடுப்பனவை வழங்கினால் போதும் என்றே குறிப்பிட்டிருந்தன.

எனவே, வீடுகளைத் தூய்மைப்படுத்தப் பெறப்பட்ட நிதி தொடர்பான பெயர்பட்டியலைக் காட்சிப்படுத்துமாறு கோரப்பட்ட இடத்தில், உலருணவுப் பட்டியலை காட்சிப்படுத்தியுள்ளமை பலத்த சந்தேகங்களையும், விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டமைப்புத் திட்டத்துக்கு உலக வங்கியால் கடனுதவி

**கொழும்பு,டிசெ.11**
**2030ஆம் ஆண்டுக்குள் நாட்டுக்கான 70 சதவீத மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யும் இலக்கை எட்டுவதற்காக - உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு உலக வங்கிக் குழுமத்தின் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து இலங்கை அரசாங்கம் 30 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாகப் பெறவுள்ளது.**

நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் உலக வங்கிக் குழுமத்தின் மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கைக்கான பிராந்தியப் பணிப்பாளர் டேவிட் என். சிஸ்லன்டேவிட் என். சிஸ்லென் ஆகியோர் இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்தப் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மாற்றத்தில் தனியார் துறையின் முதலீடுகளை அதிகரிக்க உலக வங்கி கட்டண உத்தரவாத வசதியையும் வழங்கத் திட்டமிட்டுள்ளது.

மொத்த திட்டச் செலவான சுமார் 60 மில்லியன் அமெரிக்க டொலரில், முதற்கட்டமாக 30 மில்லியன் டொலரை உலக வங்கி வழங்குகிறது. இந்தத் திட்டம் வலுசக்தி அமைச்சு போன்ற தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து இலங்கை மின்சார சபையினால் செயற்படுத்தப்படும் என்று நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## பேரிடரால் இலங்கை வங்குரோத்தடையாது

### அரசு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.11
பேரிடரால் இலங்கை மீண்டும் வங்குரோத்து நிலைக்குச் செல்லும் என முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டு களை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இதுதொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிக்கையில்,

பேரிடரால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்படியான நிலையிலும் சில தரப்பினர் அரசியல் நடத்துவதற்கு முற்படுகின்றனர். அதனால் தான் இடைக்கால அரசாங்கம் பற்றி எல்லாம் கதைக்கின்றனர். நாட்டில் அரசியல் கலாசாரம் மாறிவிட்டது என்பது இவர்களுக்கு இன்னும் புரியவில்லை. அதனால்தான் பழைய அரசியல் கலாசார மனோநிலையிலேயே இருக்கின்றனர்.

நாட்டில் பேரிடர் ஏற்படுவதற்கு முன்னரே டிசெம்பர் மாதம் அரசாங்கம் விழும் என்றார்கள். இப்படியானவர்களின் கருத்துகள் பற்றி அலட்டிக் கொள்ளத்தேவையில்லை- என்றார். (ச-44)

வெள்ள நிவாரணத்தில் பாரபட்சம்

## கிராம அலுவலருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 11
அரசாங்கத்தால் வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் தமது குடும்பத்தைத் திட்டமிட்டுப் புறக்கணித்துள்ளதாகத் தெரிவித்து, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக சிறுவன் ஒருவனால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முறைப்பாட்டாளரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் உள்ளதாவது:-

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட, கல்லுண்டாய் புதிய வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும் எனக்குத் தந்தை இல்லை. தாயின் பாராமரிப்பிலும் பாதுகாப்பிலும் வளர்ந்து வருகின்றேன். அத்துடன் நான் கல்வி கற்று வருகிறேன்.

எனது தாயார் குடும்பத்தின் பொருளாதாரச் சுமை காரணமாக, தற்காலிகமாக கொழும்புக்கு வேலைக்குச் சென்று 3 மாத காலமாகின்றது. ஆகையால் எனது பாதுகாப்புக் கருதி என்னை குருநகரில் வசிக்கும் பெரியதாயாருடன் விட்டுச் சென்றுள்ளார்.

எனது வீடு கல்லுண்டாயில் இருப்பதால் நான் அங்கு ஒவ்வொரு ஞாயிறும் சென்று வருகின்றேன். அங்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மத ஆராதனையும் நடைபெறுகின்றது. ஆனால் இரு வாரமாக நான் அங்கு செல்லவில்லை வெள்ளம் வந்ததால் வீட்டின் மின் இணைப்புக்களில் தண்ணீர் சென்றுள்ளது என உறவினர் சென்று பர்வையிட்டு வந்து கூறினார். அதனால், அரசாங்கம் வழங்கும் வெள்ள அனர்த்த நிதியினை வழங்குவதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு எனது தாயார் கிராம உத்தியோகத்தரிடம் கேட்க, அவர் அதனை மறுத்து விட்டார். எமது குடும்பம் திட்டமிட்டரீதியில்புறக்கணிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தீர்வொன்றைப் பெற்றுத் தரவேண்டும் - என்றுள்ளது. (ம-26)

## ஜனவரி...

பரீட்சைகள் எப்போது நடைபெறும் என பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது. இவ்வாறான நிலையிலேயே அந்தப் பரீட்சைகளை ஜனவரி மாதம் 12ஆம் திகதிமுதல் நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, சாதாரண தர மாணவர்களைத் தவிர, ஏனைய மாணவர்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சைகள் நடைபெறாது என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

அலுவலக உதவியாளர் தேவை
யாழ். நகரப் பகுதியிலும், யாழ். நகரத்தை அண்டிய பகுதியிலும் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
074 154 9551
(CS 30753) A

English Classes
தனியாகவும் அல்லது குழுவாகவும் வீடு வந்து கற்பிக்கப்படும்.
Students, University students and for Workers
✔ Grammar ✔ Spoken
T.P: 077 33 14 608
(CS 30754) A

பணியாளர்கள் தேவை
யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல நட்சத்திர விடுதிக்கு கீழ்க்கண்ட பணிகளுக்காக பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.
■ சுத்திகரிப்பு பணியாளர்கள் ■ பாதுகாப்பு பணியாளர்கள்
தொடர்புகளுக்கு:-
076 345 3485, 076 624 8529
E-mail: hrvalampuri@gmail.com
(CS/30302) J-1

பெயர்மாற்றம்
சாவகச்சேரி, டச்சு வீதி, 2ம் ஒழுங்கையைச் சேர்ந்த விஸ்வநாதன் சண்முகநாதா ஆகிய நான் இன்று தொடக்கம் விஸ்வநாதன் சண்முகநாதன் என பெயரை மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் விஸ்வநாதன் சண்முகநாதன் என கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.
விஸ்வநாதன் சண்முகநாதன்
(CS/30896) J-1

வேலையாட்கள் தேவை
யாழ் நகரில் அமைந்துள்ள தங்குமிட விடுதி ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு:-
021 221 9559
(CS/60135) J-1

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நவகிரி மெயின் றோட்டுடன் 38 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியில்
- செம்மண்தரை, நிலப்பரப்பு, குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நிலாவரைக் கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- யாழ்ப்பாணம் பஸ் நிலையம் 10 km
தொடர்பு:- 076 860 2770
076 987 8617
(CS 30852) A

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.12. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org